சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–30.06.2021

**<u>சாதாரணக்கூட்டம்</u>**

திருவள்ளுவர் ஆண்டு, பிலவ வருடம் ஆனி மாதம் 16–ஆம் நாள் (ஜீன் திங்கள் 30–ஆம் நாள்:–30.06.2021) புதன் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களாக TATA Ace TN60AY1716, TN60AW6753, TN60AW6707 & TN60AW6788 ஆகிய நான்கு வாகனங்களுக்கும் **2021–2022**ஆம் ஆண்டிற்கான காப்பீட்டு பிரிமியத் தொகை வாகனம் ஒன்றிற்கு ரூ.**10709/–** வீதம் **(4x10709)** ரூ.**42836/–**ஐ செலுத்த வேண்டி கேட்பு, Reliance General Insurance என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றதை தொடர்ந்து மேற்கண்ட காப்பீட்டு பிரிமியத் தொகையான ரூ.**42836/–**ஐ மேற்படி நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்குவதை மன்றம் ஏற்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **292, நாள்.30.06.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.2**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN60Z2921 என்ற டிராக்டர் வாகனத்திற்கு 2021–2022ம் ஆண்டிற்கான காப்பீட்டு பிரிமியத் தொகை ரூ.**10900/–**ஐ தேனி யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த அறிவுறுத்தி, பட்டியல் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து, மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்குவதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0308/2018/எச்1** |
| **தீர்மான எண், நாள்** | **293, நாள்.30.06.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.3**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் குறுகிய சந்துகளில் உள்ள வீடுகளில் சேகரம் செய்யப்படும் குப்பைகளை சேகரம் செய்ய திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–2019ம் ஆண்டு திட்ட நிதியின் கீழ் 23 எண்ணம் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் (Battery Operated Vehicle) வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் குப்பைகளை சேகரம் செய்ய பயன்படுத்தப்படும் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி பேட்டரி மூலம் இயங்கும் வாகன சேஸ் எண்.403, 420, 457, 495 மற்றும் 503 –க்கு பழுது நீக்கம் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு – ரூ.4.40 இலட்சத்திற்கு பழுது நீக்கும் பணிக்கு 04.06.2021 அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றன.

1. **M/s Una's RIchsaw, Dharapuram – Esatimate Rate**
2. **M/s.Jayam Equipments and Engineering, Dharapuram – 1.53% மதிப்பீட்டைவிட அதிகம்**

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள M/s Una's RIchsaw, Dharapuram என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4152/2020/இ1).**

**தீர்மான எண், நாள்** **294, நாள்.30.06.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.2, இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகனமேடை வளாகத்தில் கொரோனா தொற்று இரண்டாம் அலை காரணமாக ஏற்படும் உயிரிழப்பு சடலங்களை எரியூட்டும் பொழுது கண்காணிப்பு பணி மேற்கொள்ள CCTV Camera பொருத்துமாறு தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோர்களின் அறிவுரையின்படி CCTV Camera பொருத்த ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.0.72 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1927/2021/இ1)**

**தீர்மான எண், நாள்** **295, நாள்.30.06.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்திரவின்படி கொரோனா தொற்று பரவல் தடுப்பு தொடர் நடவடிக்கையாக வீடு வீடாகச் சென்று தொற்றிற்கான அறிகுறி மற்றும் காய்ச்சல் கணக்கெடுக்கும் பணியினை நகராட்சி DBC பணியாளர்கள் மற்றும் துணை பயிற்சி செவிலியர்களை கொண்டு கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ள அறிவுறுத்தியதை தொடர்ந்து மேற்படி கணக்கெடுக்கும் பணிக்கு தேவையான கணக்கெடுப்பு படிவம் 5000 எண்ணம் கமலி கம்ப்யூட்டர் பிரஸ், சின்னமனூர் என்ற நிறுவனத்தில் அச்சிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.4800/—ஐ மேற்கண்ட நிறுவனம் கேட்டுக் கொண்டதை தொடர்ந்து மேற்படி தொகை வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:— **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழஙகியதை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **296, நாள்.30.06.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

இந்நகராட்சியின் குடிநீர் விநியோகப் பணியில் போதிய பணியாளர்கள் இல்லாததால் Head works, Filter Bed, Tank Operator and Leak பணிகள் போன்றவற்றை கவனிக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்வதற்கு நகர்மன்ற தீர்மான எண்.280, நாள்.31.05.2021 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை செய்வதற்கு 17.06.2021ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்த்ன் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | விகிதம் |
|---|---|---|
| **1.** | **திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி** | **0.019% மதிப்பீட்டைவிட குறைவு** |
| **2.** | **திரு.கே.வனராஜ், சின்னமனூர்** | **1.32% மதிப்பீட்டைவிட அதிகம்** |

அலுவலகக் குறிப்பு:— **1.மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் 0.019% குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**
**2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழஙகியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1450/2012/இ2)**

**தீர்மான எண், நாள்** **297, நாள்.30.06.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

சின்னமனூர் நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டப்பணி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அரசாணை எண்.19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.12.2009இன்படி திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ரூ.14.52 கோடி மதிப்பீட்டில், ஒப்படைப்பு பணியாக இரண்டு சிப்பங்கள் நிறைவு செய்யப்பட்டு, மேற் பராமரிப்புப் பணிக்கு, சோதனை ஓட்டம் நிறைவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் நகரில் 32.123 கி.மீட்டர் நீளத்திற்கு பைப்லைன் பதிக்கப்பட்டுள்ளதுடன், வார்டு எண்.2–இல் இராதா கிருஷ்ணா ரைஸ்மில் தெருவில், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கான பராமரிப்பு பணிக்கென பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய பராமரிப்பிற்கும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப் பணிகளாக பராமரிக்கப்பட்டு வருகிறது. அதன்படி ஜீலை 2021 முதல் மேற்படி பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2.மேற்படி செலவினத்தை பாதாள சாக்கடைத் திட்ட நிதியில் மேற்கொள்ளலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **298, நாள்.30.06.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.8**

சின்னமனூர் நகராட்சியில் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.த.தவசி முத்துராஜா என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் களப்பணி உதவியாளராகப் பதவி உயர்வு வழங்கக் கோரி W.P.(MD) No.5815 of 2021இல் தலைமைச் செயலர் அவர்களை முதல் பிரதிவாதியாகவும், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாகவும், சின்னமனூர் நகராட்சி ஆணையாளர் அவர்களை மூன்றாம் பிரதிவாதியாகவும் சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.கே.மகேந்திரன் அவர்களை ஆஜராகி வழக்கினை நடத்திடவும் வழக்கறிஞர் கட்டணம் தொகை ரூ.10000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1348/2021/சி1)** |
| **தீர்மான எண், நாள்** | **299, நாள்.30.06.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.9**

சின்னமனூர் நகராட்சியில் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.த.சரவணக்குமார் என்பவர் ஓட்டுனராகப் பதவி உயர்வு வழஙகக் கோரி W.P.(MD) No.10732 of 2020–இல் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை முதல் பிரதிவாதியாகவும், சின்னமனூர் நகராட்சி ஆணையாளர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாகவும் சேர்த்து சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.கே.மகேந்திரன் அவர்களை ஆஜராகி வழக்கினை நடத்திடவும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.5000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–      மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3073/2019/சி1)**

**தீர்மான எண், நாள்      300, நாள்.30.06.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பதிவேடுகள், இரசீது புத்தகங்கள், எழுது பொருட்கள் அனைத்தும் வாங்கவும் 2021–2022–ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/–க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–      மன்றம் அனுமதிக்கலாம்.**
**தீர்மான எண், நாள்      301, நாள்.30.06.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.11**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் கட்டிட இனங்களுக்கு நகராட்சியின் மூலம் கட்டிட அனுமதி வழங்குவதற்கு, உரிய விதிமுறைகளின்படி கட்டிட வரைபடம் சமர்ப்பிக்கும் பொருட்டு 14.06.2021ம் தேதிய விண்ணப்பத்தில் திரு.ஆர்.சுந்தரமூர்த்தி என்பவர் புதியதாக கட்டிட வரைபட பொறியாளர் Grade-III நிலையில் பதிவு செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி வரப்பெற்ற விண்ணப்பதாரரின் அசல் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டதின் அடிப்படையில், அன்னாரை கட்டிட வரைபட பொறியாளர் (Grade-III) நிலை III-ஆக தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் விதிகள் 2019–இன்படி (அரசு ஆணை எண்.எம்.எஸ்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019) பதிவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–      மன்றம் அனுமதிக்கலாம். (ந.கஎண்.1300/2021/எப்1)**
**தீர்மான எண், நாள்      302, நாள்.30.06.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் கட்டிட இனங்களுக்கு நகராட்சியின் மூலம் கட்டிட அனுமதி வழங்குவதற்கு, உரிய விதிமுறைகளின்படி கட்டிட வரைபடம் சமர்ப்பிக்கும் பொருட்டு 28.04.2021ம் தேதிய விண்ணப்பத்தில் திரு.எம்.ஜெயமணி என்பவர் புதியதாக கட்டிட வரைபட பொறியாளர் Grade-III நிலையில் பதிவு செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி வரப்பெற்ற விண்ணப்பதாரரின் அசல் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டதின் அடிப்படையில், அன்னாரை கட்டிட வரைபட பொறியாளர் (Grade-III) நிலை III-ஆக தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் விதிகள் 2019–இன்படி (அரசு ஆணை எண்.எம்.எஸ்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019) பதிவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1300/2021/எப்1)**
**தீர்மான எண், நாள்** **303, நாள்.30.06.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.13**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இரண்டாம் நிலை சேகரிப்பு வாகனமான TN60Z2921 என்ற டிராக்டர் வாகனத்திற்கு 2021–2022–ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தல் பணி (Renewal) மேற்கொள்ள மேற்கண்ட வாகனத்தில் சில பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளார். மேற்கண்ட பணியினை அங்கீகரிக்கப்பட்ட பணிமனையில் பணி மேற்கொள்ள வேண்டி M/s Mahindra Traders நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான ஸ்ரீ அய்யனார் மோட்டார்ஸ், தேனி என்ற நிறுவனத்தில் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.92000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2000/2021/எச்1)**
**தீர்மான எண், நாள்** **304, நாள்.30.06.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.14**

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 17.11.2020ம் நாளிட்ட ந.க.20452/2020/எல்ஏ2 எண் சுற்றறிக்கையில் 2020–2021ம் ஆண்டிற்கான 15–ஆம் மத்திய நிதிக்குழுவின் திட்டத்தின் கீழ் முதல் மற்றும் இரண்டாம் கட்ட உத்தேச மானியத்தில் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறி முறைகளைப் பின்பற்றி சின்னமனூர் நகராட்சியில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து, இந்நகர்மன்றத்தின் 07.01.2021ம் நாளிட்ட தீர்மான எண்.186 மற்றும் 187–இல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதில் தீர்மான எண்.186–இன்படி உத்தேசிக்கப்பட்ட பணியும், 187–இல் தீர்மானிக்கப்பட்ட (வரிசை எண்.3–இல்) மினி ஜெட்ராடிங் வாகனம் வாங்கும் பணியும், வழிகாட்டு நெறிமுறைகளுக்கு முரணாக உள்ளதாகவும், அதனை மாறுதல் செய்து குடிநீர் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் (Water Supply and Solid Waste Management) மேற்கொள்ளுமாறு, மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி அறிவுரைகளைப் பின்பற்றி, தீர்மான எண் 186 மற்றும் 187–இல் தேர்வு செய்யப்பட்ட இரண்டு பணிகளுக்கு மாற்றாக கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளலாம்.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு ஜே.சி.பி இயந்திரம் வாகனம் (3DX) வாங்குதல் | 36.70 |
| 2. | தலைமை நீரேற்று நிலையத்தில் 4.50 மீ விட்டம் கொண்ட நீர் உறிஞ்சு கிணறு அமைக்கும் பணி (Infiltration Well) | 17.00 |
| 3. | குடிநீர் சுத்திகரிப்பான் நிலையத்திற்குத் தேவையான 20 குதிரை வேகத் திறன் கொண்ட திறந்த வெளி கிணற்றுக்கான நீர் மூழ்கி மோட்டார்கள் 2 எண்ணம் மற்றும் உதிரி பாகங்கள் வாங்குதல் | 7.75 |
| 4. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 மற்றும் 27 ஆகிய பகுதிகளில் குடிநீர் பகிர்மானக்குழாய்கள் பதிக்கப்படாத இடங்களில் பதிக்கும் பணி | 10.00 |
| 5. | புதிய உரக்கிடங்கில் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ள கூடத்திற்கு மறைப்புகள் மற்றும் தெருவிளக்கு வசதிகள் செய்தல் | 19.96 |

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பணிகளுக்கு மாற்றாக, மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றியும், மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கிணங்கவும் மேற்கண்ட பணிகளை 15–ஆம் மத்திய நிதிக்குழு மானியத் திட்டத்தில் மேற்கொள்ளத் தீர்மானிக்கலாம்.**

**2.பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள 1 எண்ணம் ஜே.சி.பி இயந்திர வாகனம் வாங்கும் பணிக்கு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி வழங்க வேண்டி கருத்துரு சமர்ப்பிக்கலாம்.**

**3. பணி வரிசை எண்.2 முதல் 5 வரை பணிகளுக்கு மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.**

அலுவலகக் குறிப்பு:– அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**தீர்மான எண், நாள் 305, நாள்.30.06.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.15**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்றின் இரண்டாம் அலையின் தீவிரம் வேகமாக பரவி வருகின்ற சூழ்நிலையில் கொரோனா தடுப்பு பணியில் ஈடுபடும் பணியாளர்களின் நலன் பாதுகாக்கும் பொருட்டும் மற்றும் தமழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 நடைபெற உள்ளதால் அதற்கான பணியில் ஈடுபடும் பணியாளர்களின் நலன் பாதுகாக்கும் பொருட்டு தேவையான முககவசம் வாங்க வேண்டியுள்ளது. தற்போது தேர்தல் நன்னடத்தை விதி அமுலில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோர முடியாத சூழ்நிலையில் அவசர அவசியம் கருதி 1920 ஆம் வருடாந்திர தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் பிரிவு (15)இன் கீழ் 20000 எண்ணம் முக கவசம் வாங்கிய வகையில் ஆன செலவினம் ரூ.1,57,500/–ஐ M/s MSKSVM Traders & Agencies, Theni என்ற நிறுவனத்திற்கு வழஙகலாம் மற்றும் அனுமதிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு:– பதிவு செய்யலாம் (ந.க.எண்.0454/2020/எச்1)

**தீர்மான எண், நாள் 306, நாள்.30.06.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.16**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்றின் இரண்டாம் அலையின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் பொருட்டு பொது மக்களிடம் நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரிக்க தேவையான கபசுர குடிநீர் வாஙகும் பணிக்கு 17.06.2021ஆம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **1.** | **Herbosiddh Life Care Pvt Ltd, Dindigul** | **Rs.900/– (1kg)**<br>**(GST நீஙகலாக)** |
| **2.** | **SKM Siddha And Ayurvedha Modakkurichi, Erode** | **Rs.1050/– (1kg)**<br>**(GST நீஙகலாக)** |
| **3.** | **Thiruvaagai Pharma, Madurai** | **Rs.1150/– (1kg)**<br>**(GST நீஙகலாக)** |

**அலுவலகக் குறிப்பு:–** 1.குறைவான விலைப்புள்ளி அளித்த M/s Herbosidha Life Care, Dindigul என்ற நிறுவனத்தின்விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழஙகியதை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண்.1887/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **307, நாள்.30.06.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.17**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு குப்பை சேகரிக்கும் வாகனமான TN60AW6788 என்ற வாகனத்திற்கு 2021–2022–ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தல் பணி மேற்கொள்ள வாகனத்தில் சில பராமரிப்பு மராமத்துப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணியினை அஙகீகரிக்கப்பட்ட பணிமனையில் பணி மேற்கொள்ள வேண்டி NRI Automobile Solutions தேனி என்ற நிறுவனத்தின் வாயிலாக பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.60000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2194/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **308, நாள்.30.06.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.18**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு குப்பை சேகரிக்கும் வாகனமாக TN60AV1716 என்ற TATA ACE வாகனத்திற்கு 2021–2022–ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தல் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணியினை அங்கீகரிக்கப்பட்ட பணிமனையில் பணி மேற்கொள்ள வேண்டி NRI Automobiles Solution, Theni என்ற நிறுவனத்தின் வாயிலாக பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.60000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2707/2021/எச்1)**
**தீர்மான எண், நாள்** **309, நாள்.30.06.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.19**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு குப்பை சேகரிக்கும் வாகனமாக TN60AW6707 என்ற TATA ACE வாகனத்திற்கு 2021–2022–ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தல் பணி மேற்கொள்ள வாகனத்தில் சில பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணியினை அங்கீகரிக்கப்பட்ட பணிமனையில் பணி மேற்கொள்ள வேண்டி NRI Automobiles Solution, Theni என்ற நிறுவனத்தின் வாயிலாக பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.60000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2195/2021/எச்1)**
**தீர்மான எண், நாள்** **310, நாள்.30.06.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.20**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு குப்பை சேகரிக்கும் வாகனமாக TN60AW6753 என்ற TATA ACE வாகனத்திற்கு 2021–2022–ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தல் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணியினை அங்கீகரிக்கப்பட்ட பணிமனையில் பணி மேற்கொள்ள வேண்டி NRI Automobiles Solution, Theni என்ற நிறுவனத்தின் வாயிலாக பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.60000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2193/2021/எச்1)**
**தீர்மான எண், நாள்** **311, நாள்.30.06.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.21**

சின்னமனூர் நகராட்சிக்கு 2020–2021ம் ஆண்டிற்கான 15–ஆம் நிதிக்குழுவின் பரிந்தரையின் பேரிலான பினை மான்யத் திட்டத்தின் கீழ் (Tied Grant) முதல் மற்றும் இரண்டாம் தவணை உத்தேச மான்யத்தில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 17.11.2020ம் நாளிட்ட ந.க.எண்.20452/2020/எல்ஏ2 எண் சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட வழிக்காட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி ரூ.10.00 இலட்ச மதிப்பிலான கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 03.03.2021ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தேர்தல் நன்னடத்தை விதிகள் மற்றும் கொரோனா ஊரடங்கு காரணமாக 29.06.2021 அன்று திறக்கப்பட்டு மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பணியின் பெயர் : கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 20 குதிரைவேக திறன் கொண்ட சென்ட்ரிபியூகல் மோட்டார்கள் 2 எண்ணத்தினை மாற்றி புதுப்பிக்கும் பணி மற்றும் ஸ்கீரின் சேம்பர் அமைத்தல்**

| | | |
|---|---|---|
| 1. | M/s Sri Vaari Engineering and Aqua Products , Erode | 4.95% சதவிகிதம் மதிப்பீடு விலைக்கு கூடுதல் |
| 2. | M/s Agaram Aqua Care, Erode | 5.12% சதவிகிதம் மதிப்பீடு விலைக்கு கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக வரப்பெற்றுள்ளதால், மேற்கண்ட ஒப்பந்ததாரர்களிடம் ஒப்பந்தப் பேச்சின் அடிப்படையில் (Negotiation) விலை விகிதத்தினை குறைக்க கேட்டுக் கொள்ளப்பட்டதில், மூலப் பொருட்கள் விலை மற்றும் லேபர் கூலி தற்போது அதிகமாக உள்ளதால் குறைக்க இயலாது என்று தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக 4.95% மதிப்பீட்டினைவிட அதிகமாக விலை விகிதம் கொடுத்துள்ள M/s Sri Vaari Engineering and Aqua Products, Erode என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். 2000ம் ஆண்டிற்கான உள்ளாட்சி அமைப்பிற்கான நகராட்சிப் பொறியியல் நடைமுறை நூல் இயல்–II (Chapter-II) விதி எண்.2.7.2 இல் தெரிவித்துள்ளதற்கிணங்க, அதாவது முதல் அழைப்பிலேயே மதிப்பீடு விலை விகிதத்திற்கு 5 சதவிகிதத்திற்குள் கூடுதல் தொகையினை ஒப்புதல் செய்யலாம் என தெரிவித்துள்ளதால், மேற்படி கூடுதல் தொகையினை முடிவு செய்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1.திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழஙகலாம்.**<br>**2. ஒப்பந்த தொகைக்கு (Agreement Value) கூடுதலாகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியில் ஈடு செய்யத் தீர்மானிக்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **312, நாள்.30.06.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.22**

சின்னமனூர் நகராட்சிக்கு 2020–2021ம் ஆண்டிற்கான 15–ஆம் நிதிக்குழுவின் பரிந்தரையின் பேரிலான பினை மான்யத் திட்டத்தின் கீழ் (Tied Grant) முதல் மற்றும் இரண்டாம் தவணை உத்தேச மான்யத்தில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 17.11.2020ம் நாளிட்ட ந.க.எண்.20452/2020/எல்ஏ2 எண் சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட வழிக்காட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி ரூ.9.50 இலட்ச மதிப்பிலான கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 03.03.2021ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தேர்தல் நன்னடத்தை விதிகள் மற்றும் கொரோனா ஊரடங்கின் காரணமாக 29.06.2021ம் அன்று திறக்கப்பட்டு மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பணியின் பெயர் : சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள Grit Clarifier மற்றும் மோட்டார் பம்ப் செட்டினை மாற்றியமைக்கும் பணி**

| | | |
|---|---|---|
| 1. | M/s Sri Vaari Engineering and Aqua Products , Erode | 4.97% சதவிகிதம் மதிப்பீடு விலைக்கு கூடுதல் |
| 2. | M/s Agaram Aqua Care, Erode | 5.23% சதவிகிதம் மதிப்பீடு விலைக்கு கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக வரப்பெற்றுள்ளதால், மேற்கண்ட ஒப்பந்ததாரர்களிடம் ஒப்பந்தப் பேச்சின் அடிப்படையில் (Negotiation) விலை விகிதத்தினை குறைக்க கேட்டுக் கொள்ளப்பட்டதில், மூலப்பொருள்கள் விலை மற்றும் லேபர் கூலி தற்போது அதிகமாக உள்ளதால் குறைக்க இயலாது என்று தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக 4.97% மதிப்பீட்டினைவிட அதிகமாக விலை விகிதம் கொடுத்துள்ள M/s Sri Vaari Engineering and Aqua Products., Erode என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். 2000ம் ஆண்டிற்கான உள்ளாட்சி அமைப்பிற்கான நகராட்சிப் பொறியியல் நடைமுறை நூல் இயல்–II (Chapter-II) விதி எண்.2.7.2 இல் தெரிவித்துள்ளதற்கிணங்க, அதாவது முதல் அழைப்பிலேயே மதிப்பீடு விலை விகிதத்திற்கு 5 சதவிகிதத்திற்குள் கூடுதல் தொகையினை ஒப்புதல் செய்யலாம் என தெரிவித்துள்ளதால், மேற்படி கூடுதல் தொகையினை முடிவு செய்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழஙகலாம்.**
**2. ஒப்பந்த தொகைக்கு (Agreement Value) கூடுதலாகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியில் ஈடு செய்யத் தீர்மானிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **313, நாள்.30.06.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.23**

சின்னமனூர் நகராட்சிக்கு 2020–2021ம் ஆண்டிற்கான 15–ஆம் நிதிக்குழுவின் பரிந்தரையின் பேரிலான பினை மான்யத் திட்டத்தின் கீழ் (Tied Grant) முதல் மற்றும் இரண்டாம் தவணை உத்தேச மான்யத்தில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 17.11.2020ம் நாளிட்ட ந.க.எண்.20452/2020/எல்ஏ2 எண் சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட வழிக்காட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி ரூ.10.00 இலட்ச மதிப்பிலான கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 03.03.2021ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தேர்தல் நன்னடத்தை விதிகள் மற்றும் கொரோனா ஊரடங்கின் காரணமாக 29.06.2021ம் அன்று திறக்கப்பட்டு மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பணியின் பெயர் : சிறிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு சின்ன வாய்க்காலுக்கு செல்ல சாக்கடை கட்டும் பணி**

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.சந்திரன், சின்னமனூர் | 4.95% சதவிகிதம் மதிப்பீடு விலைக்கு கூடுதல் |
| 2. | திரு.கே.,முனிசாமி, சின்னமனூர் | 5.18% சதவிகிதம் மதிப்பீடு விலைக்கு கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக வரப்பெற்றுள்ளதால், மேற்கண்ட ஒப்பந்தகாரர்களிடம் ஒப்பந்த பேச்சின் அடிப்படையில் (Negotiation) விலை விகிதத்தினை குறைக்க கேட்டுக் கொள்ளப்பட்டதில், மூலப் பொருட்கள் விலை மற்றும் லேபர் கூலி தற்போது அதிகமாக உள்ளதால் குறைக்க இயலாது என்று தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக 4.95% மதிப்பீட்டினை விட அதிகமாக விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். 2000ம் ஆண்டிற்கான உள்ளாட்சி அமைப்பிற்கான நகராட்சிப் பொறியியல் நடைமுறை நூல் இயல்–II (Chapter-II) விதி எண்.2.7.2 இல் தெரிவித்துள்ளதற்கிணங்க, அதாவது முதல் அழைப்பிலேயே மதிப்பீடு விலை விகிதத்திற்கு 5 சதவிகிதத்திற்குள் கூடுதல் தொகையினை ஒப்புதல் செய்யலாம் என தெரிவித்துள்ளதால், மேற்படி கூடுதல் தொகையினை முடிவு செய்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1.திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழஙகலாம்.**
**2. ஒப்பந்த தொகைக்கு (Agreement Value) கூடுதலாகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியில் ஈடு செய்யத் தீர்மானிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **314, நாள்.30.06.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.24**

சின்னமனூர் நகராட்சிக்கு 2020–2021ம் ஆண்டிற்கான 15–ஆம் நிதிக்குழுவின் பரிந்தரையின் பேரிலான பினை மான்யத் திட்டத்தின் கீழ் (Tied Grant) முதல் மற்றும் இரண்டாம் தவணை உத்தேச மான்யத்தில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 17.11.2020ம் நாளிட்ட ந.க.எண்.20452/2020/எல்ஏ2 எண் சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட வழிக்காட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி ரூ.10.00 இலட்ச மதிப்பிலான கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 03.03.2021ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தேர்தல் நன்னடத்தை விதிகள் மற்றும் கொரோனா ஊரடங்கின் காரணமாக 29.06.2021ம் அன்று திறக்கப்பட்டு மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பணியின் பெயர் : குடிநீர் விநியோகப் பணிக்கு சுத்திகரிப்பு நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு பிரிவினை புதுப்பிக்கும் பணி**

| | | |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | 4.96% சதவிகிதம் மதிப்பீடு விலைக்கு கூடுதல் |
| 2. | திரு.த.தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி | 5.97% சதவிகிதம் மதிப்பீடு விலைக்கு கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக வரப்பெற்றுள்ளதால், மேற்கண்ட ஒப்பந்ததாரர்களிடம் ஒப்பந்தப் பேச்சின் அடிப்படையில் (Negotiation) விலை விகிதத்தினை குறைக்க கேட்டுக் கொள்ளப்பட்டதில், மூலப் பொருட்கள் விலை மற்றும் லேபர் கூலி தற்போது அதிகமாக உள்ளதால் குறைக்க இயலாது என்று தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக 4.96% மதிப்பீட்டினை விட அதிகமாக விலை விகிதம் கொடுத்துள்ள திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். 2000ம் ஆண்டிற்கான உள்ளாட்சி அமைப்பிற்கான நகராட்சிப் பொறியியல் நடைமுறை நூல் இயல்–II (Chapter-II) விதி எண்.2.7.2 இல் தெரிவித்துள்ளதற்கிணங்க, அதாவது முதல் அழைப்பிலேயே மதிப்பீடு விலை விகிதத்திற்கு 5 சதவிகிதத்திற்குள் கூடுதல் தொகையினை ஒப்புதல் செய்யலாம் என தெரிவித்துள்ளதால், மேற்படி கூடுதல் தொகையினை முடிவு செய்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழஙகலாம்.**<br>**2. ஒப்பந்த தொகைக்கு (Agreement Value) கூடுதலாகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியில் ஈடு செய்யத் தீர்மானிக்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **315, நாள்.30.06.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.25**

சின்னமனூர் நகராட்சிக்கு 2020–2021ம் ஆண்டிற்கான 15–ஆம் நிதிக்குழுவின் பரிந்தரையின் பேரிலான பினை மான்யத் திட்டத்தின் கீழ் (Tied Grant) முதல் மற்றும் இரண்டாம் தவணை உத்தேச மான்யத்தில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 17.11.2020ம் நாளிட்ட ந.க.எண்.20452/2020/எல்ஏ2 எண் சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட வழிக்காட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி ரூ.10.00 இலட்ச மதிப்பிலான கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 03.03.2021ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தேர்தல் நன்னடத்தை விதிகள் மற்றும் கொரோனா ஊரடங்கின் காரணமாக 29.06.2021ம் அன்று திறக்கப்பட்டு மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பணியின் பெயர் : இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6,7,13 மற்றும் 14–இல் பகிர்மானக் குழாய்கள் அமைக்கும் பணி**

| | | |
|---|---|---|
| 1. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | 4.97% சதவிகிதம் மதிப்பீடு விலைக்கு கூடுதல் |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | 6.32% சதவிகிதம் மதிப்பீடு விலைக்கு கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக வரப்பெற்றுள்ளதால், மேற்கண்ட ஒப்பந்ததாரர்களிடம் ஒப்பந்தப் பேச்சின் அடிப்படையில் (Negotiation) விலை விகிதத்தினை குறைக்க கேட்டுக் கொள்ளப்பட்டதில், மூலப் பொருட்கள் விலை மற்றும் லேபர் கூலி தற்போது அதிகமாக உள்ளதால் குறைக்க இயலாது என்று தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக 4.97% மதிப்பீட்டினை விட அதிகமாக விலை விகிதம் கொடுத்துள்ள திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். 2000ம் ஆண்டிற்கான உள்ளாட்சி அமைப்பிற்கான நகராட்சிப் பொறியியல் நடைமுறை நூல் இயல்–II (Chapter-II) விதி எண்.2.7.2 இல் தெரிவித்துள்ளதற்கிணங்க, அதாவது முதல் அழைப்பிலேயே மதிப்பீடு விலை விகிதத்திற்கு 5 சதவிகிதத்திற்குள் கூடுதல் தொகையினை ஒப்புதல் செய்யலாம் என தெரிவித்துள்ளதால், மேற்படி கூடுதல் தொகையினை முடிவு செய்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**2. ஒப்பந்த தொகைக்கு (Agreement Value) கூடுதலாகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியில் ஈடு செய்யத் தீர்மானிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **316, நாள்.30.06.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.26**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகன எண்.TN60V8239 என்ற டிப்பர் லாரிக்கு 2021–2022ம் ஆண்டிற்கான இன்சூரன்ஸ் பிரிமியத் தொகை ரூ.31048/–ஐ தேனி யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த பட்டியல் வரப்பெற்றதைத் தொடர்ந்து மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0308/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** **317, நாள்.30.06.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.27**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலமாக துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.21085/பி3/2016, நாள்.31.08.2016–இன்படி 01.08.2016 முதல் 31.07.2019 முடிய அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி காலத்திற்கு பின்பு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வது சம்மந்தமாக கடந்த 03.06.2019ம் அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு, அதனடிப்படையில் மேற்கண்ட அலுவலகத்தில் இருந்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள அனுமதி கோரி ந.க.2790/2019/அ3, நாள்.03.07.2019ஆம் தேதிய கடிதப்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்திரவு கிடைக்கும் வரை, சின்னமனூர் நகராட்சி பொது மக்களின் சுகாதார நலன் கருதி இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.0576/2015/எச்1–இன்படி, 01.08.2019 முதல் 30.06.2021 வரை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி உத்திரவை எதிர்நோக்கி ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டது.

இந்நகராட்சியில் கொரோனா தொடர்பான பணிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மேலும் தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்தல், சேகரிக்கப்பட்ட திடக்கழிவுகளை தரம்பிரித்தல், மக்கும் மற்றும் மக்காத திடக்கழிவுகளை பாதுகாப்பாக கொண்டு சேர்த்தல் போன்ற காரணங்களுக்காகவும், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தினந்தோறும் பொது மக்களிடமிருந்து வருகின்ற குறைகளை களையவும் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவை எதிர்நோக்கி மூன்று மாத காலத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.270, நாள்.31.05.2021–இன்படி ஏப்ரல் 2021 முதல் ஜீன் 2021 வரை ந.க.எண்.0576/2015/எச்1, நாள். 31.03.2021–இன் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி பணிபுரியும் நிறுவனத்தின் பணியாளர்கள் மூலம் தூய்மை பணி செய்ய நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் 30.06.2021 உடன் ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு முடிவடைவதாலும், இந்நகராட்சி பகுதியில் கொரோனா (Covid-19) தொற்று பரவல் தாக்கம் அதிகமாக இருப்பதாலும், அண்டை மாவட்டமான இம்மாவட்டத்தில் கொரோனா தொற்று அபாயம் இருப்பதாலும், மேற்கண்ட திடக்கழிவு பணியினை செயல்படுத்த வேண்டிய சூழல் உள்ளதால் அவசர அவசியம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியில் ஈடுபடவேண்டிய அவசர சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவு எதிர்நோக்கியும் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் மூன்று (01.07.2021 முதல் 30.09.2021 வரை) உள்ள மூன்று மாத காலத்திற்கு அதே விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **பொது சுகாதாரம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணி உத்திரவு வழங்கிய திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0576/2020/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **318, நாள்.30.06.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.28**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட தேனி குமுளி முக்கிய சாலையில் அமைந்துள்ள அம்மா உணவக கட்டிடத்தில் பொது மக்களின் நலன் கருதி சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.10 இலட்சத்திற்கு 21.05.2021–ஆம் தேதியன்று கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்புந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர், சின்னமனூர் – 0.05% மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர், பரமத்தேவன்பட்டி – 0.59% மதிப்பீட்டைவிட அதிகம்

அலுவலகக் குறிப்பு:– **மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0087/2021/இ1).**

**தீர்மான எண், நாள்** **319, நாள்.30.06.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.29**

சின்னமனூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.14.52 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் நிறைவு செய்யப்பட்டு, நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு, மேற்படி திட்டத்தின் கீழ் கழிவு நீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டு வருகின்றன. நகராட்சிப் பகுதியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேற்படி சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெறும் பொழுது, பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள புதை சாக்கடைப்புழை (Manholes)கள் 1234 எண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. புதிதாக சாலைகள் அமைக்கும் பொழுதும், பழைய சாலைகள் செப்பனிடும் பொழுதும் சாலைகளின் உயரம் உயர்வதால் புதை சாக்கடைப்புழைகள் (Manholes) மூடி மறைக்கப்படும் சூழல் உருவாகிறது. பாதளா சாக்கடைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள குழாய்களில் அடைப்பு ஏற்படும் பொழுதோ (Sewer Line (or) சாக்கடை புழையில் (Manholes) அடைப்பு ஏற்படும் பொழுதோ, கழிவுகள் பொங்கி சாலையில் வழிந்தோடும் நிலை ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு சாலை மட்டத்திற்கு புதை சாக்கடைப்புழைகளை (Manholes) உயர்த்தி அமைக்க வேண்டும் என மேலாவின் அறிவுரைகளைப் பின்பற்றி தயார் செய்யப்பட்டுள்ள ரூ.2.00 இலட்சத்திற்கான உத்தேச மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1. நகரின் நலன் கருதி அத்யாவசியப் பணியான புதை சாக்கடைப் புழையினை (Manholes) உயர்த்தி அமைக்கும் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கலாம்.**
**2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தினை பாதாள சாக்கடைத் திட்டப் பணியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **320, நாள்.30.06.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.30**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.2, இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் அமைந்துள்ள பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் கால்வாயினை ஜே.சி.பி இயந்திரம் மூலம் அப்புறப்படுத்தும் பணி மற்றும் பிரதானக் குழாய் உடைப்பு சரி செய்யும் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு **13.01.2021–**ஆம் தேதியன்று கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்புந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர், சின்னமனூர் – 0.25% மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர், பரமத்தேவன்பட்டி – 0.30% மதிப்பீட்டைவிட அதிகம்

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3430/2020/இ1).**<br>**2. அவசரப்பணி நிமித்தம் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியுள்ளதை அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.3430/2020/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **321, நாள்.30.06.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.31**

சின்னமனூர் நகராட்சிக்கு 2018–2019ம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (TURIP 2018–2019) ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று சிப்பங்களில் (3 Packages) பணிகள் அனுமதிக்கப்பட்டதில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டன. அதில் எள்ளுக்கட்டை பாதையில் சாலைகள் அமைக்கும் பணிகளில் மொத்தம் 380 மீட்டர் சாலைகள் அமைக்க மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டதில் சுமார் 240 மீட்டர் சாலைகள் அமைக்கும் பணி நிறைவு பெற்றுவிட்டன. மீதமுள்ள 140 மீட்டர் சாலைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகையில் கோவிட்–19 நோய்த் தொற்று அதிகமாக பரவிய காரணத்தால் பணி முடிக்க காலதாமதம் ஏற்பட்டதுடன், மேற்படி சாலையின் இருபுறமும் விவசாய நிலங்கள் இருந்தமையால், விவசாயிகளால் பாதையில் ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டிருந்தன. மேற்படி ஆக்கிரமிப்புக்களை கண்டறிந்து, அதனை நீக்கம் செய்த பின்னர்தான் சாலைப் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்ற நிலையில், விவசாயிகள் வயல்களில் கரும்பு மற்றும் நெல் சாகுபடிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனவே எஞ்சிய சாலைப் பணிகள் துவக்க இயலவில்லை. பணிகள் துவக்குவதாக இருந்தால் அறுவடைக்குப் பின்னர் ஆக்கிரமிப்புகள் அகற்றிய பின்னர் தான் பணிகள் மேற்கொள்ள இயலும் என்பதால் 5 மாத காலம் தாமதம் ஏற்படும். எஞ்சிய ரூ.14.00 இலட்சம் பணிகள் பொது நிதியில் மேற்கொள்ள வேண்டும் என்பதாலும், திட்டப் பணியினை விரைந்து முடித்து பணி முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் உள்ளதாலும், விவசாயிகளின் நலன் கருதி எஞ்சிய பணியினை தற்சமயம் கைவிட்டு, 5 மாதங்களுக்குப் பின்னர் வேறு திட்டத்தின் கீழ் அல்லது பொது நிதியிலோ எஞ்சிய பணியினை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு 5 மாதங்களுக்கு பின்னர் எஞ்சிய சுமார் 140 மீட்டர் சாலைப் பணியினை வேறு திட்டப் பணியிலோ அல்லது பொது நிதியிலோ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **322, நாள்.30.06.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.32**

சின்னமனூர் நகராட்சியில் நடைமுறையில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ், இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (STP) சில பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.12000/–க்கு நகர்மன்றத்தின் 31.12.2020ம் நாளிட்ட 172ம் எண் தீர்மானத்தில் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதற்கிணங்க, கீழ்க்கண்ட பணிகள், மேற்படி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய பராமரிப்புப் பணிக்கு மேற்கொள்ள 12.02.2021 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No | Description of Items | Unit | Thiru.K.Vanaraj Rate | Thiru.R.Paramananthan Rate |
|---|---|---|---|---|
| | | | | |
| 1 | மாப்பு | 1 எண்ணம் | 250.00 | 270.00 |
| 2 | கம்பி பிரஷ் | 1 எண்ணம் | 300.00 | 310.00 |
| 3 | பெருக்குமாறு ( தென்னமாறு) | 1 எண்ணம் | 50.00 | 55.00 |
| 4 | இரும்பு கரண்டி (ஸ்கூப்) | 1 எண்ணம் | 300.00 | 350.00 |
| 5 | கழிப்பறை பிரஷ் | 1 எண்ணம் | 250.00 | 260.00 |
| 6 | சோப்பு டெட்டால் | 1 எண்ணம் | 25.00 | 30.00 |
| 7 | குப்பை கூடை | 1 எண்ணம் | 100.00 | 110.00 |
| 8 | வீடு கூட்டும் பெருக்குமாறு | 1 எண்ணம் | 200.00 | 220.00 |
| 9 | ஸ்பேனர் செட் –பவுல் | 1 எண்ணம் | 4000.00 | 4100.00 |
| 10 | ஆயில் கேன் | 1 எண்ணம் | 60.00 | 65.00 |
| 11 | கையுரை | 1 எண்ணம் | 70.00 | 75.00 |
| 12 | பேஸ்ட் | 1 எண்ணம் | 500.00 | 520.00 |
| 13 | சாக்கெட் செட் | 1 எண்ணம் | 300.00 | 310.00 |
| 14 | L” அளாங்கி | 1 எண்ணம் | 300.00 | 320.00 |
| 15 | திருபுளி | 1 எண்ணம் | 150.00 | 150.00 |

அலுவலகக் குறிப்பு:– **1.மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் விலைப்புள்ளியைவிட திரு.கே.வனராஜ் என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்கலாம்.**

**2. மேற்படி பணிக்கான செலவினத்தை பாதாள சாக்கடைத் திட்ட நிதியில் மேற்கொள்ளலாம்.**

**3.பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று, வேலை உத்திரவு வழங்கியுள்ளதை அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.4061/2020/இ1)**

**தீர்மான எண், நாள்** **323, நாள்.30.06.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.33**

இந்நகராட்சி அலுவலக உள்ள கழிப்பறைகளை சரி செய்யும் பணி, BOV வாகனம் நிறுத்த மேற்கூரை அமைக்கும் பணி, துப்புரவு ஆய்வாளர் அறைக்கு அலுமினிய தடுப்பு அமைக்கும் பணி, மேலாளர் அறைக்கு கதவு சரி செய்யும் பணி, அலுவலக உபயோகத்திற்கு 2 எண்ணம் பீரோ, பொறியாளர், மேலாளர், கணக்காளர் ஆகியோர்களுக்கு புதியதாக மேஜை, நாற்காலி வாங்கும் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு 27.05.2021–ஆம் தேதியன்று கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்புந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 0.10% சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 0.25% சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.10%) திரு.கே.வனராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **324, நாள்.30.06.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.34**

சின்னமனூர் நகராட்சிக்கு 2018–2019–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (TURIP 2018–19) ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதில் சிப்பம் எண்.2–க்கான ரூ.185.00 இலட்சம் மதிப்பீட்டிலான சாலைப் பணிகள்மேற்கொள்ளும் பொழுது கோவிட்–19 நோய் தொற்றின் காரணமாக முழு ஊரடங்கு செய்யப்பட்டதால் சாலைப் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. மேலும் சாலைப் பணிகள் அலுவலகச் சாலையில் பேவர் பிளாக் மற்றும் சாக்கடை கால்வாய் கட்டும் பணியில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் அலுவலகத்திற்கு முன் உள்ள கால்வாயில் பணி மேற்கொண்டதாலும், அழகர்சாமி நகர்ப் பகுதியில் பைப்லைன் அமைத்தபின் சாலை அமைக்க வேண்டியுள்ளதாலும், மேற்படி சிப்பம் எண்.2–க்கான மதிப்பீட்டுத் தொகை சேமிப்பானது. மேலும் சீப்பாலக்கோட்டை சாலை குறுக்குச் சாலைகள் மற்றும் கண்ணம்மாள் கார்டன் சாலைகள் பழுதடைந்துள்ளதாலும், பணி முடிவறிக்கை உரிய காலத்தில் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், சேமிப்புத் தொகையில் மேற்படி பழுதடைந்த சாலைகளை மேற்கொள்ள மேலதிகாரிகளால் அறிவுரைகள் வழங்கப்பட்டதால், மேற்படி சேமிப்புத் தொகையில் பழுதடைந்த சாலைகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**
**தீர்மான எண், நாள்** **325, நாள்.30.06.2021**
**தீர்மானம்**

*******